# பத்திரிக்கைச் செய்தி

## விபத்தால் பாதிக்கப்பட்ட லாரியை ஒப்படைப்பதற்கு லஞ்சம் வாங்கிய காவல் ஆய்வாளர் அவர்களுக்கு 3 வருட சிறை தண்டனை விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.சுபாஷ் என்பவர் விருதுநகர் மாவட்டத்தில் லாரி ஓட்டுநராக இருந்துள்ளார். புகார்தாரரின் லாரி விபத்துக்குள்ளானதால் புகார்தாரருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து அம்மத்தூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரணை செய்த திரு.உஸ்மான் அலி, காவல் ஆய்வாளர், அம்மத்தூர் காவல் நிலையம், விருதுநகர் மாவட்டம் அவர்கள் புகார்தாரரிடம் லாரியை ஒப்படைப்பதற்காக தனக்கு லஞ்சமாக ரூ.4,000/- யை கொடுக்குமாறு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் திரு.உஸ்மான் அலி, காவல் ஆய்வாளர், அம்மத்தூர் காவல் நிலையம், விருதுநகர் மாவட்டம் அவர்கள் மீது புகார் மனு அளித்தார். இதன் பேரில் விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திரு.உஸ்மான் அலி, காவல் ஆய்வாளர் அவர்களை புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.4,000/-யை பெற்ற போது கைது செய்தனர். மேலும் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது விருதுநகர் மாவட்டம் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று 29.11.2022 இவ்வழக்கில் குற்றவாளி திரு.உஸ்மான் அலி, காவல் ஆய்வாளர் அவர்கள் புகார்தாரரிடம் லஞ்சம் ரூ.4,000/- லஞ்சம் கேட்ட குற்றத்திற்கு 2 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.5,000/- அபராதமும், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் பெற்றதற்கு 3 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.5,000/- அபராதமும் விதித்து, இத்தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.